## வெள்ளகோவில் நகராட்சி, திருப்பூர் மாவட்டம்

## 2018–ம் ஆண்டு ஜூன் மாதம் 12–ம் தேதி நடைபெற்ற சாதாரணக் கூட்டம்
## தீர்மானம் நகல்கள்

**தீர்மானம் எண் : 122 / 2018, நாள் : 12.06.2018**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலைய நுழைவுக் கட்டண வசூல் குத்தகைக்கு 7–வது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 12.06.2018–ந் தேதி நடைபெற்றதில், ஒப்பந்தப்புள்ளி எவரும் கோரப்படவில்லை. ஏலத்தில் இரண்டு நபர்கள் கலந்து கொண்டு கோரப்பட்ட உயர்ந்தபட்ச கேள்வித் தொகை விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பெயர் | உச்சபட்ச கேள்வித் தொகை (ஒரு வருடத்திற்கு) |
|---|---|---|
| 1 | கே. மாரப்பகவுண்டர், த/பெ. கந்தசாமி, பாலத்துப்புதூர், அப்பிபாளையம் (அஞ்சல்), மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம் | 455000 |
| 2 | எஸ். தங்கம், த/பெ. சந்தானம், 35, திருப்பரங்குன்றம், மதுரை | 456000 |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஏலக்கேள்விகளில் அதிகபட்ச தொகையாக திரு. எஸ். தங்கம், த/பெ. சந்தானம், என்பவர் கோரியுள்ளார். இந்நிலையில் ஏற்கனவே நடைபெற்ற 6 ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தில் ஒப்பந்தப்புள்ளி எவரும் தெரிவிக்கவில்லை. 2–வது ஏலத்தில் இரண்டு நபர்கள் கலந்து கொண்டதில், எவரும் ஏலம் கோரவில்லை. 3–வது மற்றும் 4–வது ஏலத்தில் தலா ஒருவர் மட்டுமே கலந்து கொண்டதால், எதிர் கேள்வி கோர ஆளில்லாததால், ஏலம் தள்ளி வைக்கப்பட்டது. 5 மற்றும் 6–வது ஏலத்தில் ஒருவரும் கலந்து கொள்ளவில்லை. இந்நிலையில் தற்போது கோரியுள்ள அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகையை விட கடைசி ஆண்டு வசூல் செய்த குத்தகை தொகை அதிகமாகும். அதே நிலையில் தற்போது கோரியுள்ள அதிக பட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை 3 ஆண்டின் சராசரி தொகை (ரூ. 4,25,000 /- + ரூ 4,46,250 /- + ரூ 4,68,570 = ரூ. 13,39,820 / 3 = ரூ. 4,46,607 /-) ரூ. 4,46,607 /-) விட அதிகமாகும் என்பதால் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகையை இறுதி செய்வது குறித்த மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) 6 முறை ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் கோரியும் மேற்படி ஏலம் தீர்வு பெறாததாலும் தற்போதைய உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கேள்வி தொகை கடந்த 3 ஆண்டின் சராசரியைவிட கூடுதலாக உள்ளதாலும் உயர்ந்தபட்சமாக எஸ். தங்கம், த/பெ. சந்தானம், 35, திருப்பரங்குன்றம், மதுரை என்பவரின் ஒப்பந்தப்புள்ளி கேள்வித் தொகையை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண்.2032/2017/அ3)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 123 / 2018, நாள் : 12.06.2018**

இந்நகராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலைய கடை எண். 4 மற்றும் 8, வாரச்சந்தை முகப்பு கடை எண். 4 மற்றும் 8, தீத்தாம்பாளையம் வணிகக் கடை எண். 1, 2, 3 மற்றும் 4 ஆகிய 8 கடைகளுக்கு 12.06.2018–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் நடைபெற்றது. இதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் தீத்தாம்பாளையம் கடை எண். 2, 3 மற்றும் 4க்கு தலா இருவர் கலந்து கொண்டனர். மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | குத்தகை விபரம் | கலந்து கொண்டவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளித் தொகை (ஒரு வருடத்திற்கு) |
|---|---|---|---|
| 1 | தீத்தாம்பாளையம் கடை எண். 2 | என். கருணாகரன், த/பெ. நாச்சிமுத்து, 143, மேற்கு தெரு, தீத்தாம்பாளையம், வெள்ளகோவில் | ரூ. 1100 /– |

| | | | |
|---|---|---|---|
| | | கே. ராமசாமி, த/பெ. கருப்பணமுதலியார், மேற்கு தெரு, தீத்தாம்பாளையம், வெள்ளகோவில் | ரூ. 1150 /– |
| 2 | தீத்தாம்பாளையம் கடை எண். 3 | என். கருணாகரன், த/பெ. நாச்சிமுத்து, 143, மேற்கு தெரு, தீத்தாம்பாளையம், வெள்ளகோவில் | ரூ. 1150 /– |
| | | கே. ராமசாமி, த/பெ. கருப்பணமுதலியார், மேற்கு தெரு, தீத்தாம்பாளையம், வெள்ளகோவில் | ரூ. 1100 /– |
| 3 | தீத்தாம்பாளையம் கடை எண். 4 | வி. தண்டபாணி, த/பெ. வீரப்பன், 103, தாராபுரம் ரோடு, சிவநாதபுரம், வெள்ளகோவில் | ரூ. 1150 /– |
| | | பி. கணேசன், த/பெ. பழனியப்பன், 93, சிவநாதபுரம், வெள்ளகோவில் | ரூ. 1100 /– |

மேற்படி வரப்பெற்ற அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையான தீத்தாம்பாளையம் கடை எண். 2, 3 மற்றும் 4–க்கான ஒப்பந்ததாரருக்கு கடையின் குத்தகை உரிமத்தை ஒப்படைப்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை கோரிய கடை எண். 2–ஐ திரு. கே. ராமசாமி என்பவருக்கும், கடை எண். 3–ஐ திரு. என். கருணாகரன் என்பவருக்கும் மற்றும் கடை எண். 4–ஐ திரு. வி. தண்டபாணி என்பவருக்கும் குத்தகை உரிமத்தை ஊர்ஜிதம் செய்து வழங்கலாம்.

(கோப்பு எண். 2032 / 2017 / அ3)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 124 / 2018, நாள் : 12.06.2018**

இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு 27.12.2016–ல் ஏலம் கோரப்பட்டு உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கோரிய திரு.பி.சுப்பிரமணியன், த/பெ பழனிச்சாமி கரூர் என்பவருக்கு 2017–18 முதல் 2019–2020 வரை மூன்றாண்டுக்கு மேற்படி குத்தகை வசூல் செய்ய மன்ற அனுமதி பெற்று உத்திரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் 2018–2019 ஆண்டுக்கான குத்தகை தொகை 31.03.2018 –ற்குள் செலுத்தக் கோரியும் நாளது தேதி வரை தொகை செலுத்தாததரல் 01.06.2018 முதல் நகராட்சி மூலம் வாரச்சந்தையில் சுங்கம் வசூலிக்க இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 116 / 2018, நாள். 28.05.2018–ல் அனுமதி வழங்கப்பட்டதன்பேரில் குத்தகைதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. இந்நிலையில் குத்தகைததாரர் திரு. பி. சுப்பிரமணியன் என்பவர் 31.05.2018ல் மொத்த ஏலத் தொகையில் மூன்றில் ஒரு பங்குத் தொகையான ரூ. 6,00,000 /–த்தினை நகராட்சியில் செலுத்தியுள்ளதால், ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட நகர்மன்றத் தீர்மானம் எண். 116 / 2018, நாள். 28.05.2018–னை ரத்து செய்யவும், மேற்கண்ட குத்தகைதாரர் வாரச்சந்தையில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்தினை தொடர்ந்து நடத்தவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது .

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(நக.எண். 578/2018/அ3)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 125 / 2018, நாள் : 12.06.2018**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள 06.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் மற்றும் HDPE hose அமைத்தல் மற்றும் Re-bore | 7,80,000/- | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.92 % அதிகமாக |
| | | | கங்கனம் | 5.91 % அதிகமாக |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்தல் சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் | | கன்ஸ்ட்ரக்சன் | |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், D.R நகர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.94/2018/இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 126 / 2018, நாள் : 12.06.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள 06.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராடசிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்தல் மற்றும் கேட் வால்வுகள் அமைத்தல் | 5,30,000/- | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.90 % அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 5.91 % அதிகமாக |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், D.R நகர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.94/2018/இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 127 / 2018, நாள் : 12.06.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் இடங்களில் 10” AC மெயின் குழாய் பழுதடைந்து தண்ணீர் மிக அதிகமாக வீணாகிறது. இதனால் காவிரி குடிநீர் திட்டத்தின் 40 கு.வே. மின்மோட்டார் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படும் பகுதிகளான டி.சி.ரோடு மேல்நிலைத் தொட்டி, சிவநாதபுரம் மேல்நிலைத் தொட்டி, தீத்தாம்பாளையம் மேல்நிலைத் தொட்டி மற்றும் உப்புப்பாளையம் மேல்நிலைத் தொட்டி மண்டலங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையுள்ளது. இதனால் பொதுமக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே குடிநீர் விநியோகப்பணிகளின் அவசர அவசியம் கருதி உடனடியாக பழுதுகள் சரிசெய்ய வேண்டி தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ. 74,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 094 /2018/இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 128 / 2018, நாள் : 12.06.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சி – பொது சுகாதாரப்பிரிவில் வீடு வீடாகச் சென்று டெங்குத் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்வதற்கு 45 DBC பணியாளர்களைக் கொண்டு டெங்குக் காய்ச்சல் ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள மன்றத் தீர்மானம் எண். 53 / 2018, நாள். 15.03.2018–ல் அனுமதிக்கப்பட்டதில் அனுமதி காலம் 30.06.2018 உடன் முடிவடைகிறது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 1588 / ஜே1 / 2015, நாள். 15.10.2015 மற்றும் துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 1588 / ஜே1 / 2015, நாள். 15.10.2015 மற்றும் துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள், திருப்பூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 509 / அ2 / 2010, நாள். 07.10.2015–ல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வீடு வீடாக சென்று டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள தற்காலிகப் பணியாளர்களை 300 வீடுகளுக்கு 2 களப்பணியாளர்கள் உள்ளனர். 15140 வீடுகளுக்கு 50 தற்காலிக DBC களப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தலாம். எனவே 01.07.2018 முதல் 30.09.2018 வரையான காலத்திற்கு 45 தற்காலிக களப்பணியாளர்களை மாவட்ட ஆட்சியரின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 5863 / 2017 / உ3, நாள். 22.09.2017 திருப்பூர் அவர்களின் தினக்கூலி விலை விகிதப்படி பணியில் ஈடுபடுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 9,50,000 /–ம் ஆகும். மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 862 / 2015 / எச்1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 129 / 2018, நாள் : 12.06.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பணி வாகனம் மினி லாரி TN 42 Y 3074க்கு தகுதிச் சான்று 10.07.2018-ம் தேதியுடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மேற்படி வாகனத்திற்கு தகுதிச் சான்று பெறவும், வண்டியில உள்ள பழுதுகள் நீக்கம் செய்து பெயிண்டிங் வேலைகள் மேற்கொள்ளும் பணிக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 90,000 /–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனையில் விலைப்புள்ளி பெற்று அவசர அவசியம் கருதி பணிமேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1163/2018/ஹெச்1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 130 / 2018, நாள் : 12.06.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 8, இந்திராநகர் வடக்கு பகுதியில் பி.கே. மில் கேட் அருகில் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால், பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ளதாக வரப்பெற்ற பொதுமக்களின் விண்ணப்பத்தின்படி, மேற்படி சாலையை சீரமைப்பு செய்து சிமெண்ட் சாலையாக அமைக்க வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளது மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 18, காமராஜபுரம் பகுதியில் மழைநீர் வடிகால் பழுதடைந்தள்ளதாகவும், இதனை சரிசெய்து கொடுக்குமாறும் கேட்டு வரபெற்ற பொதுமக்களின் விண்ணப்பத்தின்படி, மேற்படி பகுதியில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகாலை பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். எனவே மேற்படி சாலை சீரமைப்பு பணி மற்றும் வடிகால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 5,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 937/2018/இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 131 / 2018, நாள் : 12.06.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சி முத்துகுமார் நகரில் உள்ள சின்டெக்ஸ் உடைந்து பழுதடைந்துள்ளதால், தண்ணீர் பிடிக்க இயலாமல் உள்ளது. எனவே புதியதாக சின்டெக்ஸ் தொட்டி அமைக்க அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான மதிப்பீடு ரூ. 30,000 /–ம் ஆகும்.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். / 2018 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 132 / 2018, நாள் : 12.06.2018</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான எரிவாயு தகனமேடை கணபதிபாளையம் சாலையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் Wooden gasifier இயந்திரம் பழுதுபட்டு துளைகள் ஏற்படும். இதனை அவ்வப்பொழுது Welding செய்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்த இயந்திரத்தின் சுவர் 4.00 MM thickness கொண்டதால் இதன் திறன் மிகவும் குறைந்த நிலையில் தற்சமயம் பழுதடைந்துள்ளது. இதனை தொடர்ந்து Welding செய்து பராமரிக்க இயலாத நிலையுள்ளது. எனவே புதியதாக Wooden gasifier அமைப்பு தயாரித்து பொருத்தப்பட வேண்டும். இது அடிக்கடி பழுதடையாமலும் இதன் தாங்கும் திறனை அதிகரிக்கும் பொருட்டும் 10 MM thickness –ல் இதனை தயார் செய்யலாம். இப்பணி பொதுமக்கள் நலன் கருதி அத்தியாவசியமாக மேற்கொள்ளவேண்டியுள்ளது. இந்தப்பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 4,05,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1040/2018/இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 133 / 2018, நாள் : 12.06.2018</u>**

நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதார வாகனங்களின் பழுதடைந்த டயர்களை ரீட்ரேடிங் செய்து மீண்டும் பயன்படுத்தும் வகையில் செய்து கொடுக்க 16.05.2018 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ.எண் | விபரம் | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|
| | | **Super Trasnports (P) Limited, Karur** | **M/s. Eniya Tyre Retreading co, Karur** | **Iswarya Tyres, Karur** |
| 1 | 7.50 x 16 | 3400 | 4050 | 3950 |
| 2 | 8.25 x 16 | 3700 | 3750 | 3700 |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான தொகை தெரிவித்துள்ள Super Trasnports (P) Limited, Karur அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 763 / 2018 / எச்1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 134 / 2018, நாள் : 12.06.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சி பகுதிகளுக்கு காவிரி கூட்டுக்குடிநீர் திட்டம் மற்றும் அமராவதி குடிநீர் திட்டம் ஆகிய குடிநீர் திட்டங்களின் மூலமாக நான்கு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு தினசரி குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க

வேண்டும் என உயர் அதிகாரிகளால் அறிவுறுத்தப்பட்டது. இதன்படி தினசரி குடிநீர் விநியோகம் செய்ய தடையாக உள்ள காரணிகளை கண்டறிந்து நிவர்த்தி செய்யவும் இதற்கான அபிவிருத்தி மற்றும் கட்டுமான பணிகள் மேற்கொள்வது சம்பந்தமாக ஆய்வு செய்து சர்வே பணிகள் செய்து விரிவான திட்ட அறிக்கை தயாரித்து கொடுக்கும் பணிக்கு தகுதி வாய்ந்த தொழில்நுட்ப ஆலோசகர்கள் நியமனம் செய்ய ஒப்பந்த அடிப்படையில் SPT கன்சல்டிங் நிறுவனத்துக்கு ஒரு மாத காலத்தில் பணியினை முடித்துக் கொடுக்க கால அளவு நிர்ணயம் செய்து 05.02.2018 அன்று வேலை உத்திரவு வழங்கப்பட்டது. ரூ.**10.00** இலட்சம் மதிப்பீட்டில் இப்பணியை மேற்கொள்ள வேலை உத்திரவு கிடைக்கப்பெற்ற மூன்று தினங்களுக்குள் ஒப்பந்தப்பத்திரம் அலுவலகத்தில் ஒப்படைத்து பணி ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆனால், ஒப்பந்ததாரரால் எவ்வித நடவடிக்கையும் இது வரை மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் பொதுமக்கள் தினசரி 24 மணி நேரமும் குடிநீர் பெறும் வகையில் DMA 24 X7 எனும் திட்டத்தின் கீழ் நவீன தொழில் நுட்பத்தின் கீழ் தேவையான அபிவிருத்தி மற்றும் கட்டுமான பணிகள் மேற்கொண்டு **"தினசரி 24 மணி நேரமும் குடிநீர் விநியோகம்"** எனும் இலக்கை அடைய நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, இதற்கான தொழில்நுட்ப ஆலோசகர் நியமனம் செய்து விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.

தினசரி குடிநீர் விநியோகம் என்ற நிலையிலிருந்து தினசரி 24 மணி நேர குடிநீர் விநியோகம் என்ற நோக்கில் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியுள்ளதால், தினசரி குடிநீர் விநியோகத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை கைவிடவும் மேலும் இந்தப் பணிக்காக வழங்கிய வேலை உத்திரவை இரத்து செய்யலாம்

**<u>அலுவலககுறிப்பு</u>**

மேற்படி பணியை இரத்து செய்வதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 945 / 2018 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

## <u>தீர்மானம் எண் : 135 / 2018, நாள் : 12.06.2018</u>

இந்நகராட்சிக்குச் சொந்தமான எரிவாயு தகனமேடையில் Wooden gasifire இயந்திரம் பழுதடைந்து பராமரிப்பு செய்ய இயலாததால் புதியதாக தயாரித்து அமைக்கப்பட வேண்டியுள்ளது. இந்த இயந்திரத்தை எரிவாயு தகனமேடையின் அறைக்குள் கொண்டு சென்று பொருத்த இயலாத நிலையுள்ளது. இதற்காக சுவரை உடைத்து கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இதனை தவிர்க்கும் பொருட்டு தகனமேடையின் வடபுற பகுதியில ஒரு செட் அமைத்து இந்த இயந்திரத்தை பொருத்த வேண்டியுள்ளது. இதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 1,50,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண். 1040 / 2018 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

## <u>தீர்மானம் எண் : 136 / 2018, நாள் : 12.06.2018</u>

வெள்ளகோவில் நகராட்சி ஈப்பு வாகனம் TN 42 V 5638 ஆயில் சர்வீஸ் மற்றும் 4 வீல் பிரேக் செட் பழுது பார்த்துத் தரகோரி ஈப்பு ஓட்டுநர் மனு அளித்துள்ளார். மேற்படி பழுதுகளை சரிசெய்ய மதிப்பீடு ரூ. 40,000 /–க்கு தயார் செய்யப்பட்டு உள்ளது. மேற்படி மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1138 / 2018 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 137 / 2018, நாள் : 29.06.2018**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12503 / 2018 / ஆர்1, நாள். 21.05.2018–ல் தெரிவித்துள்ளபடி தொழில்வரி சீராய்வு குறித்த அறிவிப்பு தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ. 18,900 /– பட்டியல் எண். ADB 0606, நாள். 12.06.2018, கோவை மாலைமுரசு நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1047 / 2018 / அ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 138 / 2018, நாள் : 29.06.2018**

இந்நகராட்சிக்குக் சொந்தமான பேருந்து நிலைய கடை எண். 4 மற்றும் 8, வாரச்சந்தை முகப்பு கடை எண். 4 மற்றும் 8, தீத்தாம்பாளையம் வணிகக் கடை எண். 1, ஆகிய 5 கடைகளுக்கு 28.06.2018–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி மற்றும் பொது ஏலம் நடைபெற்றது. இதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளியில் வாரச்சந்தை முகப்பு கடை 4க்கு தலா இருவர் கலந்து கொண்டனர். மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ. எண் | குத்தகை விபரம் | கலந்து கொண்டவர்கள் விபரம் | ஒப்பந்தப்புள்ளித் தொகை (ஒரு வருடத்திற்கு) |
|---|---|---|---|
| 1 | வாரச்சந்தை முகப்பு கடை எண். 4 | திரு. ர. தங்கவேல், த/பெ. ரங்கசாமி, 41பி, சேரன் நகர், அகலரப்பாளையம்புதூர், வெள்ளகோவில் | ரூ. 3400 /– |
| | | திரு. ரகுபிரசாத், த/பெ. இரா. தங்கவேல், 41பி, சேரன் நகர், அகலரப்பாளையம்புதூர், வெள்ளகோவில் | ரூ. 3300 /– |

மேற்படி வரப்பெற்ற அதிகபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகையான வாரச்சந்தை முகப்பு கடை 4–க்கான ஒப்பந்ததாரருக்கு கடையின் குத்தகை உரிமத்தை ஒப்படைப்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை கோரிய திரு. ர. தங்கவேல் என்பவருக்கு குத்தகை உரிமத்தை ஊர்ஜிதம் செய்து வழங்கலாம்.

(கோப்பு எண். 2032 / 2017 / அ3)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 139 / 2018, நாள் : 29.06.2018**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வெள்ளகோவில்–மூலனூர் சாலை (வழி) அக்கரைப்பாளையம் சாலையில் கி.மீ. 1/300–1/500–ல் சாலை அகலப்படுத்தும் பணி நடைபெறுவதாகவும், இவ்விடத்தில் உள்ள குடிநீர் குழாய் மேற்கண்ட பணிக்கு இடையூறாக உள்ளதாகவும், இந்தக் குழாய்களை மாற்றியமைத்துக் கொள்ளுமாறு கேட்டு வரப்பெற்ற உதவிப்பொறியாளர், நெடுஞ்சாலை கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, வெள்ளகோவில் அவர்களின் கடிதம் ந.க.எண். 30 / 2018 / உ.பொ / நாள். 14.06.2018–ந் தேதிய கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. மேற்படி குழாய்களை பணியின் அவசர அவசியம் கருதி மாற்றியமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 2,00,000 /–க்கு மன்றத்தின் அனுமதி கோரி வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.          /2018 / இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 140 / 2018, நாள் : 29.06.2018</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 12, கரட்டுப்பாளையம் பகுதி ரீ.ச.எண். 1482/1ஏ மற்றும் 1488/பி2–ல் கே. சுப்பிரமணியம் என்பவரால், திருமண மண்டபம் கட்டிடம் கட்ட அனுமதி கோரப்பட்ட விண்ணபத்தின்படி, நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநர், சேலம் அவர்களின் கடிதம் ந.க.எண். 820 / 2018 / சேம3, நாள். 23.03.2018–ந் தேதிய கடிதத்தின்படி உத்தேச இட அமைப்பில் 934 ச.மீட்டர் கொண்ட பரப்பளவு பொது உபயோகத்தினை நகராட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்யத் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, விண்ணபதாரரான கே. சுப்பிரமணியம், த/பெ. குமாரசாமிகவுண்டர், 83, சொரியங்கிணத்துப்பாளையம் என்பவரால், வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 12, கரட்டுப்பாளையம் பகுதி ரீ.ச.எண். 1482/1ஏ மற்றும் 1488/பி2–ல் கீழ்கண்டவாறு 934 ச.மீட்டர் பரப்பளவிலான இடத்தினை வெள்ளகோவில் நகராட்சிக்கு தானமாக வழங்க வெள்ளகோவில் சார்பதிவாளர் அலுவலக பத்திர பதிவு எண். 2145 / 2018, நாள். 22.06.2018–ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது வெள்ளகோவில் நகராட்சிக்கு நன்கொடையாக ஏற்றுக் கொள்ளமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>சொத்து விபரம்</u>**

திருப்பூர் பதிவு மாவட்டம், வெள்ளகோவில் துணைப்பதிவு வட்டம் காங்கயம் வட்டம் வெள்ளகோவில் கிராமம் ரீ.ச.எண். 1482/1, நெ.பு.ஹெக். 1.60.5 க்கு த.ரூ. 0.22 இதன் பழைய க.ச.எண். 1482 இது தற்போதைய புதிய உட்பிரிவின்படி 1482/1ஏ ஆகும். பின்னும் ரீ.ச.எண். 1483/பி நெ.பு.ஹெக். 1.03.5 க்கு த.ரூ. 3.48 இது தற்போதைய உட்பிரிவின்படி 1482/பி2 ஆகிய காலைகளில் அமைந்துள்ளதும், வரைபடத்தில் OSR என குறிக்கப்பட்டுள்ளதுமான சொத்துக்கு செக்குபந்தியும் அளவுகளும்,

| | |
|---|---|
| க.ச. 1482/1பி காலைக்கும் | வடக்கு |
| க.ச. 1484 நெ.காலையில் நிலையில் உள்ள 9.14 மீட்டர் அகல மெயின்ரோட்டிற்கும் | கிழக்கு |
| திருமண மண்டபம் அமையவுள்ள இடத்திற்கும் | தெற்கு |
| க.ச. 1482/1பி நெ.காலைக்கும் | மேற்கு |

இதன்மத்தியில்

| | |
|---|---|
| வடபுறம் கிழமேல் | 72.61 மீட்டர் |
| தென்புறம் கிழமேல் | 73.20 மீட்டர் |
| கிழபுறம் தென்வடல் | 13.25 மீட்டர் |
| மேல்புறம் தென்வடல் கிராசாக | 4 மீட்டர் |

அதிலிருந்து வடக்கு நோக்கி 10/95 மீட்டர் இந்த அளவுள்ள 934 சதுரமீட்டர் மொத்த விஸ்தீர்ணம் உள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடஜாகா (OSR) சகிதம்

<u>அலுவலககுறிப்பு</u>

திறவிடத்தினை வெள்ளகோவில் நகராட்சிக்கு நன்கொடையாக ஏற்றுக் கொள்ளலாம்.
(கோப்பு எண். 265 / 2018 / எப்1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 141 / 2018, நாள் : 29.06.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள 29.06.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செம்மாண்டம்பாளையம் பொது கிணறு மின்மோட்டார் அறை பழுது பார்த்தல் | 95,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.98 % அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 6.06 % அதிகமாக |

**<u>அலுவலககுறிப்பு</u>**

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், D.R நகர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.94/2018/இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 142 / 2018, நாள் : 29.06.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள **29.06.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | முத்துக்குமார் நகரில் சின்டெக்ஸ் மாற்றியமைத்தல் | 30,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.94 % அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 5.14 % அதிகமாக |

**<u>அலுவலககுறிப்பு</u>**

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், D.R நகர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.94/2018/இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 143 / 2018, நாள் : 29.06.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள **29.06.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | ஈரோடு ரோடு பகுதியில் 10 “ AC மெயின் லைன் பழுது பார்த்தல் | 74,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.97 % அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 6.18 % அதிகமாக |

**<u>அலுவலககுறிப்பு</u>**

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், D.R நகர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.94/2018/இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 144 / 2018, நாள் : 29.06.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள **29.06.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்திராநகர் பகுதியில் கான்கிரிட் சாலை அமைத்தல் மற்றும் காமராஜபுரம் பகுதியில் வடிகால் அமைத்தல் | 5,00,000 | வீரா கன்ஸ்ட்ரக்சன் | 4.92 % அதிகமாக |
| | | | கங்கனம் கன்ஸ்ட்ரக்சன் | 5.20 % அதிகமாக |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், D.R நகர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.94/2018/இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 145 / 2018, நாள் : 29.06.2018</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் கீழ்காணும் பணிமேற்கொள்ள **27.06.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் பின்வருமாறு

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்குட்பட்ட கணபதிபாளையம் எரிவாயு தகனமேடை எரிவாயுகலன் பழுதுபார்த்தல் | 4,05,000 | Fine Air system | 0.07 % குறைவாக |
| | | | Veera construciton | 2.79 % அதிகமாக |

<u>அலுவலககுறிப்பு</u>

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம்.
2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான மதிப்பீட்டுத் தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி தெரிவித்த வீரா கன்ஸ்ட்ரக்சன், Fine Air system, Covai ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1040/2018/இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 146 / 2018, நாள் : 29.06.2018</u>**

நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 12981 / 2017 / இ3, நாள். 27.06.2018 செயல்முறை உத்தரவில் கீழ்கண்டுள்ள விபரப்படி TURIP 2018-2019 திட்டத்தின்கீழ் ரூ. **5.00** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண். | நிதி ஒதுக்கீடு விபரம் | ஒதுக்கீட்டுத் தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புர சாலைகள்மேம்பாட்டு திட்ட மானிய நிதி | 1.90 |
| 2 | மாநில நிதிக்குழு / மத்திய நிதிக்குழு மானிய நிதி | 1.50 |
| 3 | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | 1.10 |
| 4 | நகராட்சியின் பங்குத் தொகை | 0.50 |
| | **மொத்தம்** | **5.00** |

இத்திட்டத்தின்கீழ் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | சாலையின் அகலம் (மீ) | சாலையின் நீளம் (கி.மீ.) | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | கரட்டுப்பாளையம் முதல் கணபதிபாளையம் சாலை வரை தார்சாலை அமைத்தல் மற்றும் நடேசன் நகர், எல்.கேசி.நகர், வள்ளியரச்சல் ரோடு, கரட்டுப்பாளையம் குறுக்கு வீதி, சொரியங்கிணத்துப்பாளையம், ஈரோடு ரோடு மற்றும் காமராஜபுரம் பகுதிகளில் உள்ள தார்சாலைகளை புதுப்பித்தல் | 4.50 | 4.87 | 200.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | காடையூரான்வலசு முதல் எல்.கே.சி.நகர் வரை தார்சாலை அமைத்தல் மற்றும் அகலரப்பாளையம்புதூர், தீத்தாம்பாளையம், மு.பழனிச்சாமி நகர், ராஜீவ் நகர், மூலனூர் ரோடு, குமாரவலசு மற்றும் உப்புப்பாளையம் சாலை ஆகிய பகுதிகளில் உள்ள தார்சாலைகளை சீரமைத்தல் | 4.50 | 5.10 | 200.00 |
| 3 | சிவநாதபுரம், கல்லாங்காட்டுவலசு, உப்புப்பாளையம், டி.சி.ரோடு, காந்தி நகர், திருமங்கலம் மற்றும் கே.பி.சி.நகர் பகுதிகளில் உள்ள தார்சாலைகளை சீரமைத்தல் | 4.50 | 2.68 | 100.00 |
| | **மொத்தம்** | | **12.65** | **500.00** |

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண்.1292 / 2018/இ1)

**தீர்மானம் – அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**(ஒப்பம்) திரு. இ. ஷாஜஹான்**
**தனி அலுவலர்**
**/ ஆணையாளர்**
**வெள்ளகோவில் நகராட்சி**